**கற்பிட்டி பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கட்பிட்டி பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 24 காணி மற்றும் கட்டிட அலகுகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைத்தல் மற்றும் ரூபா 36,000 தொகையான இரண்டு கெமராக்கள் நிலையானச் சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன், ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த முத்திரைக் கட்டண பெறுவனவுகளான ரூபா 18,342,613 மற்றும் ரூபா 17,756 கூட்டுத்தொகையான தொலைபேசி மற்றும் மின்சாரப் பட்டியல்கள் கடன் பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொடுப்பனவுகள் கடன்பட்டோர் மூவரின் நிதியேற்பாடுகள் ரூபா 148,356 தொகை கூடுதலாகவும், கடன் கொடுத்தோர் இருவருக்குரிய ரூபா 9,975 தொகை குறைவாகவும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிறைவேற்றப்படாத 26 செயற்திட்டங்களின் ரூபா 5,014,975 தொகையான நிதியேற்பாடு கைத்தொழில் கடன்பட்டோராக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதியானது ரூபா 16,527,949 ஆக இருந்ததுடன், பட்டோலைகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 16,261,852 ஆனமையால் வேறுபாடு ரூபா 266,097 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியின் உள்ளவாறு பெற வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 53,667,468 ஆக இருந்ததுடன், செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 30,580,052 ஆகும். அவற்றுள் ஒரு வருடத்திற்கு மேலான பெற வேண்டிய கணக்குகள் ரூபா 17,358,386 மற்றும் 3 வருடங்களை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்குகள் ரூபா 13,188,762 ஆகும்.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அறவிட வேண்டியதாக காணப்பட்ட ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,319,572 ஆனதுடன் 07 வருடங்களிற்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 138,041 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் ரூபா 113,663,673 ஆன கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீசீலனை செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடனான இனங்காமைகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129 (அ) மற்றும் (ஈ) பிரிவுகளின் பிரகாரம் பெற வேண்டிய வீதவரி, குத்தகை வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா 45,194,021 அறவிடப்பட்டிருக்காததுடன், அதிகாரச்சட்டத்தின் 150 (4) பிரிவின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்திலுள்ள வியாபார நிலையங்களின் அனுமதிப்பத்திர கட்டணங்களை செலுத்தாதோர் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 371 (5) இன் பிரகாரம் 1989 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 278,087 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகளை (முற்பணங்கள்) உரிய ஆண்டினுள் தீர்ப்பதற்கும்,

நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 2 வருடங்களைக் கடந்த ரூபா 1,425,879 பெறுமதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல வருடங்களாக அறவிடப்பட்டிருந்த ரூபா 289,387 தொகையான பொருட்கள் மற்றும் சேவைகள் வரி, ரூபா 4,326,351 தொகையான பெறுமதி சேர் வரி மற்றும் ரூபா 53,221 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி ஆகியவற்றை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,005,549 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,991,395 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டினுள் மீண்டெழும் செலவினங்களுக்காக பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த அளவில் 33 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 31 மில்லியன் தொகையான மொத்த மூலதன செலவினத்தில் ரூபா 25 மில்லியன் அல்லது 80 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலினான செயலாற்றல்

மீளாய்வாண்டினுள் சபையினால் நிலுவை வருமானம் மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானங்களை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்.

| வருமானத் தலைப்பு | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை வருமானம் | நிலுவையிலான அறவீடு | நிலுவைப் பண அறவீட்டின் செயன் முன்னேற்றம் | வருடத்தினுள் பட்டியலிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானத்திலான அறவீடு | அறவீட்டின் செயன் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | % | ரூபா '000 | ரூபா '000 | % |
| வீதவரி மற்றும் ஏக்கர் வரி | 7,992 | 1,206 | 15 | 1,818 | 413 | 23 |
| குத்தகை வாடகை | 4,046 | 2,035 | 50 | 2,374 | 144 | 06 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 75 | 4 | 05 | 2,118 | 2,118 | 100 |
| ஏனைய வருமானங்கள் | 4,858 | 178 | 04 | 3,118 | 2,978 | 96 |

**2.3.2 வீதவரியும் வரியும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை ரூபா 7,277,733 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் பட்டியலிடல்கள் ரூபா 1,754,803 தொகையுடன் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 9,032,536 ஆகும். அவற்றுள் ரூபா 1,582,285 அறவிடப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியிலான மொத்த நிலுவை ரூபா 7,450,251 அல்லது 18 சதவீதமாக இருந்தது.

(ஆ) அதிகார எல்லையினுள் புதிதாக கட்டிடங்களை நிர்மாணித்தல் அல்லது காணப்படும் கட்டிடங்களை மேம்படுத்துவதற்கு திட்டங்களை அங்கீகரித்ததன் பின்னர் இசைவாக்க சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த கட்டிடங்களுடனான காணிகளின் வீதவரி திருத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 குத்தகை வாடகை**

2015 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை குத்தகை வாடகையானது ரூபா 8,460,925 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் பட்டியலிடல்கள் ரூபா 5,445,538 ஆனமையால் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 13,906,463 ஆகும். அவற்றுள் மீளாய்வாண்டினுள் ரூபா 6,549,593 அல்லது 47 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

**2.3.4 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2015 ஒக்தோபர் முதல் திசெம்பர் மாதம் வரை பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்ட ரூபா 1,020,081 தொகையான நீதிமன்ற தண்டப்பணத்தில் ரூபா 720,081 தொகை 2016 பெப்ரவரி மாதத்தின் போது கிடைத்திருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 18,342,613 தொகையான முத்திரைக் கட்டணங்களில் ரூபா 13,042,663 தொகை 2016 ஆம் ஆண்டின் பெப்ரவரி மற்றும் மே மாதங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 282,124 தொகையான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிராததுடன், இதில் 02 வருடங்களுக்கு மேலான முற்பணங்களின் பெறுமதி ரூபா 280,124 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 0002890535 இலக்கம் கொண்ட வங்கி நடைமுறை கணக்கின் கணக்கிணக்க கூற்றுகளில் சபையின் உப அலுவலகங்களின் கையிருப்பிலுள்ள மீதியாக பௌதீக ரீதியில் காணப்படாத ரூபா 18,667 கூட்டுத்தொகையான மீதியொன்று தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஊழியர் நலன்புரி நிதியத்தின் பங்களிப்பு தொகையினை தாமதித்து செலுத்தியமையின் காரணத்தால் விதிக்கப்பட்டிருந்த ரூபா 6,749 தொகையான மிகைக் கட்டணம் சபையின் நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதிய நிதியத்திற்கு ரூபா 1,951,770 தொகையான பணம் செலுத்த வேண்டியிருந்தது.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

வடமேல் மாகாண பிரதம செயலாளரின் 2010 ஒக்தோபர் 05 ஆந் திகதிய வ/பி/செ/05/03 கணக்காய்வு குழு இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கூட்டம் காலாண்டிற்கு ஒன்று வீதம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் எந்தவொரு கூட்டத்தடவையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 சூழல் பாதுகாப்பு**

சபையினால் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், சந்தைக்கு பொருந்தும் விதத்தில் கூட்டெரு உற்பத்தியினை வழங்குவதற்கு சபை தவறியிருந்தது.

**4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

08 வாகனங்கள் 01 முதல் 07 வருடங்களுக்கு இடைப்பட்ட காலவீச்சினுள் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டமையால் விளைவற்று போயிருந்ததுடன், அவற்றுள் 06 வாகனங்களின் பெறுமதி ரூபா 1,719,515 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது.

**(ஆ) வருடாந்த மெய்மையாய்வு**

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சபையின் சொத்துக்களின் உரித்து உறுதிப்படுத்தப்பட்டிராததுடன், முன்னைய ஆண்டின் மதிப்பாய்வு சபையின் அறிக்கையின் பிரகாரம், 222 வாசிகசாலை புத்தகங்கள் தொலைந்து போயிருந்தன. அவற்றின் பெறுமதியினை பொறுப்புக்கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

**4.4 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

சபையின் செயலாளர் பதவியானது பல வருடங்களாக வெற்றிடமாக நிலவுவதுடன், இரண்டாம் நிலையிலான மற்றும் ஆரம்ப நிலையிலான 11 வெற்றிடங்கள் நிலவின. இரண்டாம் மற்றும் ஆரம்ப நிலைகளின் பதவிகளில் நிரந்தர சேவையின் 28 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டு 2015 ஆம் ஆண்டில் சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 8,843,541 தொகை உள்ளூராட்சி திணைக்களத்தால் (வடமேல்) மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. வெற்றிடங்கள் நிரப்பப்படுமாயின் அதற்காக சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை மீளளிப்பு செய்ய முடியும் என்பதால் சபைக்கு இந்த செலவினத்தை சேமிக்க கூடியதாக இருந்திருக்கும்.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) கணக்கீடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு